நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2019

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : இடைநிலை - மேற்பிரிவு (ஆண்டு 7, 8)

**Level : Mid Intermediate (Year 7 & 8)**

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

Time Given : 90 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**June 2019**

**I. கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

1. அக்காவின் திருமணத்திற்கு நாங்கள் அனைவரும் பட்டாடை உடுத்திச் சென்று மகிழ்ந்தோம்.

(அ) பட் + டாடை (ஆ) பட்டா + டை

(இ) பட்டு + ஆடை (ஈ) பட்டா + ஆடை

2. பாவாணர் தமிழரின் மரபு பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்.

(அ) சொற் + பொழிவு (ஆ) சொற்ப் + ஒழிவு

(இ) சொ + பொழிவு (ஈ) சொல் + பொழிவு

3. ஒரு மொழியில் உள்ள சொற்களைப் பொருள்பட அகர வரிசையில் தொகுத்து வழங்கும் நூல் அகராதி எனப்படும்.

(அ) அகரா + தி (ஆ) அக + ராதி

(இ) அகரம் + ஆதி (ஈ) அகம் + ஆதி

4. இயல் இசையுடன் நடிப்பும் இணைந்ததே நாடகம் எனப்படும்.

(அ) நாட் + அகம் (ஆ) நாடு + அகம்

(இ) நா + டகம் (ஈ) நாடு + கம்

5. தாயைப் பார்த்தவுடன் குழந்தை செவ்விதழ் விரியச் சிரித்தது.

(அ) செ + விதழ் (ஆ) செவ்வ + இதழ்

(இ) செவ் + விதழ் (ஈ) செம்மை + இதழ்

**II. பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க: (மதிப்பெண்கள் 5 X 1 = 5)**

6. நாங்கள் சுற்றுலா சென்ற இடத்தில் பலதரப்பட்ட மக்களைப் பார்த்தோம்.

(அ) உயர்தரமான (ஆ) தரமான

(இ) கீழ்த்தரமான (ஈ) பலவிதமான

7. செல்வி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.

(அ) சாதரணமான (ஆ) வறுமையான

(இ) கடினமான (ஈ) பழமையான

8. கோபாலன் உயர்வு தாழ்வின்றி அனைவரிடமும் பழகும் பண்பாளன்.

(அ) உயர்வின்றி (ஆ) சரிசமமின்றி

(இ) தாழ்வின்றி (ஈ) பாகுபாடின்றி

9. காவேரி தன் பாடங்களைக் கண்ணுங்கருத்துமாகப் படிப்பாள்.

(அ) கண்ணால் (ஆ) கவலையோடு

(இ) பொறுப்பாக (ஈ) ஆர்வமின்றி

10. கதிர் அதிக கட்டணம் தரமுடியாது என்று திட்டவட்டமாக மறுத்தான்.

(அ) உறுதியாக (ஆ) திட்டியபடி

(இ) கோவமாக (ஈ) அமைதியாக

III. **கோடிட்ட எழுத்துப் பிழையுள்ள சொற்களை திருத்தி எழுதுக (மதிப்பெண்கள் 5 x 2 = 10)**

‘நட்பில்லா மனிதன் என்றால் (11) அவனோரு மனிதன் இல்லை’. நட்பு என்பது தெரியாத (12) ஒருவறிடம் பழகி, அவரைப் புரிந்து கொண்டு இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்வதோடு தக்க சமயத்தில் உதவி புரிவதாகும். மேலும், வழி தவறும் பொழுது அன்புடன் எடுத்துரைத்து ஒருவரை (13) நல்வலிக்கு இட்டுச் செல்வதே நல்ல (14) நட்புகு இலக்கணமாகும். நட்பு என்னும் சொல் (15) தோளமை எனப் பொருள்படும்.

11. ________ 12. ________ 13. ________

14. ________ 15. ________

IV. **சரியான விடையை தெரிவு செய்க. (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

16. காடும் காடு சார்ந்த இடமும்

(அ) முல்லை (ஆ) குறிஞ்சி

(இ) மருதம் (ஈ) பாலை

17. கடையெழு வள்ளல்களில் ஒருவர்

(அ) இளங்கோ அடிகள் (ஆ) அக்பர்

(இ) பாரி (ஈ) தசரதன்

18. நமது பாரம்பரிய விளையாட்டில் ஒன்று

(அ) குத்து சண்டை (ஆ) கபடி

(இ) கூடைப் பந்து (ஈ) சதுரங்கம்

19. வரலாற்றுக்குச் சான்றாக விளங்கும் பொருட்களைக் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் இடம்

(அ) நூலகம் (ஆ) அருங்காட்சியகம்

(இ) உயிரியல் பூங்கா (ஈ) தோட்டம்

20. கொன்றைவேந்தன் என்னும் நூலை எழுதியவர்

(அ) திருவள்ளுவர் (ஆ) கம்பர்

(இ) சீத்தலைச்சாத்தனார் (ஈ) ஔவையார்

**V. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் முதல் (அ) வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் (ஆ) வாக்கியத்தை நிறைவு செய்க: (மதிப்பெண்கள் 4 x 2 = 8)**

21. (அ) நாங்கள் நாளை மிருகக்காட்சி சாலைக்கு நண்பர்களுடன் செல்கிறோம்.

(ஆ) மிருகக்காட்சி சாலைக்கு நாங்கள் ..............................

22. (அ) அன்னை தெரேசா அறப்பணியாற்றியதற்காக பாரத ரத்னா விருது பெற்றார்.

(ஆ) அறப்பணியாற்றியதற்காக அன்னை தெரேசா ..............................

23. (அ) நீங்கள் தமிழ் மொழி கற்க, சனிக்கிழமை தோறும் தமிழ்ப் பள்ளிக்கு செல்கிறீர்களா?

(ஆ) நீங்கள் சனிக்கிழமை தோறும் தமிழ் மொழி ..............................

24. (அ) சத்தான உணவு உட்கொள்வது உடலுக்குப் பலம் சேர்க்க மிகவும் அவசியம்.

(ஆ) உடலுக்குப் பலம் சேர்க்க ..............................

**VI. பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 25 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுக. (மதிப்பெண்கள் 5 x 3 = 15)**

வ. உ. சி என்று அழைக்கப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்பிள்ளை ஓர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர். இவர் பிரித்தானியக் கப்பல்களுக்குப் போட்டியாக முதலாவது இந்திய கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். இவர் தொடங்கிய கப்பல் நிறுவனம், தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொண்டது. இதனால் பிரித்தானிய அரசால் தேசத் துரோகியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

வ.உ.சிதம்பரம்பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். தமிழ் மொழியில் உள்ள பல இலக்கியங்களைப் படித்து அவற்றைப் பற்றி கட்டுரைகளையும், செய்யுள்களையும் எழுதியுள்ளார், அத்துடன் ஆங்கில நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார். இவர் விடுதலைப் போராட்டத்தைக் குறித்தும் தமிழ் இலக்கியங்களைக் குறித்தும் நண்பர்களுடன் விவாதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதோடு மற்றவர்களையும் அதில் பங்கு கொள்ளச் செய்தார். அத்துடன் ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்தும் போராடினார்.

25. வ. உ. சி யின் முழுப்பெயர் என்ன?

26. வ. உ. சி எந்த நிறுவனத்தைத் தொடங்கினார்?

27. வ. உ. சி, எத்தனை மொழிகளில் புலமை பெற்றவர்? அவை யாவை?

28. வ. உ. சி யின் கப்பல் நிறுவனம் எந்த நகரங்களுக்கு இடையில் போக்குவரத்தை மேற்கொண்டது?

29. வ. உ. சி ஆங்கிலேயர்களை எதற்காக எதிர்த்துப் போராடினார்?

VII. **பின்வரும் 30 முதல் 34 வரையிலான வினாக்களில் உள்ள வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க: (மதிப்பெண்கள் 5 x 1 = 5)**

30. (அ) குறிஞ்சி (ஆ) முல்லை (இ) மருதம் (ஈ) காலை

31. (அ) புத்தகம் (ஆ) பாடு (இ) ஏடு (ஈ) நூல்

32. (அ) தினை (ஆ) பனை (இ) தென்னை (ஈ) வாழை

33. (அ) கருவி (ஆ) கணினி (இ) இயந்திரம் (ஈ) குருவி

34. (அ) மாமி (ஆ) சித்தி (இ) மாமா (ஈ) அண்ணி

VIII. கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழைக் கருத்தூன்றிப் படித்து 35 முதல் 39 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க: மதிப்பெண்கள் (5 x 1 = 5)




35. தமிழர் திருநாள் என்பது என்ன விழா?

(அ) தைப்பொங்கல் (ஆ) தீபாவளி

(இ) தமிழ் புத்தாண்டு (ஈ) ஆயுத பூசை

36. இந்நிகழ்ச்சி யாரால் நடாத்தப்பட்டது?

(அ) தேவாலயம் (ஆ) ஆலயம்

(இ) பள்ளிவாசல் (ஈ) தமிழாலயம்

37. இந்த விழா மனிதர்களுக்கும் எதற்கும் இடையே உள்ள வலிமையான உறவை குறிக்கின்றது?

(அ) இறைவனுக்கும் (ஆ) பறவைகளுக்கும்

(இ) இயற்கைக்கும் (ஈ) ஆயுதங்களுக்கும்

38. விழா எப்பொழுது நடைபெற்றது?

(அ) காலை (ஆ) பிற்பகல்

(இ) முற்பகல் (ஈ) இரவு

39. என்னென்ன நிகழ்வுகள் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டு உள்ளன?

(அ) கூட்டு உரை (ஆ) கருத்தாய்வு மற்றும் விருந்து

(இ) உணவு பரிமாற்றம் (ஈ) மதிப்பளிப்பு மற்றும் கலைநிகழ்வுகள்

IX. **பின்வரும் 40 முதல் 44 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க: (மதிப்பெண்கள்: 5 x 1 = 5)**

40. பெரியோர் சொன்ன அறிவுரை அமுதம் போல் ................................

(அ) கசக்கும் (ஆ) இனிக்கும்

(இ) காக்கும் (ஈ) வாழ்வு தரும்

41. சிறிய காரியத்தையும் ................................ செய்க

(அ) பார்த்து (ஆ) விரைந்து

(இ) ஆராய்ந்து (ஈ) கேட்டு

42. அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமும் வைத்து பேசாதே என்றால்

(அ) அரவமாட்டேல் (ஆ) வஞ்சகம் பேசேல்

(இ) அழகலாதன செயேல் (ஈ) நன்றி மறவேல்

43. 'நன்மை கடைப்பிடி' என்பதன் பொருள்

(அ) துன்பம் வரும்படி நடந்து கொள்

(ஆ) நன்மையான செயல்களை நீக்கு

(இ) சொல்லில் குற்றம் படப் பேசு

(ஈ) நல்ல குணங்களை உறுதியாகப் பற்றிக்கொள்

44. நோயற்ற வாழ்வே குறைவற்ற ---------------------------

(அ) பணம் (ஆ) வசதி

(இ) செல்வம் (ஈ) காசு

X. **பின்வரும் 45 முதல் 48 வரையுள்ள வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களை தமிழுக்கும், தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்து எழுதுக. (மதிப்பெண்கள் 4 x 2 = 8 )**

45. நீ பாலில் தண்ணீரை கலக்கக் கூடாது

46. அவன் பேருந்தில் ஏற முயற்சி செய்தான், ஆனால் அவனால் ஏற முடியவில்லை

47. This question is very easy

48. We play football everyday

XI. பேச்சு வழக்கில் உள்ள சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றுக:
**(மதிப்பெண்கள் 9 x 1 = 9 )**

49. (அ) காலகாலமா கதை (ஆ) சொல்றதும், கதை (இ) கேக்கறதும் எல்லாத் (ஈ) தேசத்திலயும் வாய்மொழி மரபாக இருந்து (உ) வந்திருக்கு. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் ஓய்வு (ஊ) நேரத்தில உறவினர்களுடன் பொழுதைக் கழிக்க கதை கூறும் மரபைக் கையாண்டு (எ) வந்தாங்க. அம்மரபு இன்று வரை தமிழ் மண்ணில் இருந்து (ஏ) வருது. புனைகதை, கட்டுக்கதை, பழங்கதை என்றெல்லாம் கதைகள் (ஐ) அந்தக்காலத்தில கூறப்பட்டுள்ளன.

(அ) ................ கதை (ஆ) ................ கதை (இ) ................ எல்லாத் (ஈ) ................
வாய்மொழி மரபாக இருந்து (உ) ................ நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே,
மக்கள் ஓய்வு (ஊ) ................ உறவினர்களுடன் பொழுதைக் கழிக்க கதை கூறும்
மரபைக் கையாண்டு (எ) ................ அம்மரபு இன்று வரை தமிழ் மண்ணில் இருந்து
(ஏ) ................ புனைகதை, கட்டுக்கதை, பழங்கதை என்றெல்லாம் கதைகள்
(ஐ) ................ கூறப்பட்டுள்ளன..

XII. கட்டுரை எழுதுதல்
**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தெரிவு செய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக: (மதிப்பெண்கள் 20) (குறிப்பு: கூட்டு வாக்கியங்கள் மற்றும் கலப்பு வாக்கியங்கள் இருந்தால் நல்லது)**

50. நீங்கள் சமீபத்தில் பள்ளித் தோழர்களோடு பள்ளி முகாமுக்குச் சென்று வந்த அனுபவத்தை விவரித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

தற்போது பயன்பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு கருவி பற்றி விவரித்துக் கட்டுரை எழுதுக (உதாரணம்: தொலைக்காட்சி, கைபேசி, குளிர்சாதனப் பெட்டி,...)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018